S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE ஞாயிறு ஜனவரி 11 * 2026 * மலர் -1 * இதழ்-224* VOL-1 * ISSUE-224 விலை ரூ.3 * பக்கம் -4

## கொளத்தூர் சட்டமன்ற அலுவலகம் அருகில் நடந்த பொங்கல் விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்







### இமாசலபிரதேசத்தில் பயங்கர விபத்து:

# 500 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்ததில் 14 பேர் பலி!

## பிரதமர், முதல்வர் இரங்கல்!!



சிம்லா, ஜன.11

இமாச்சலப்பிரதேசத்தில் உள்ள சிர்மாவூர் மாவட்டத்தில் பயங்கர விபத்து ஏற்பட்டுள்ளது. 500 அடி பள்ளத்தில் பேருந்து கவிழ்ந்ததில் 14 பேர் பலியானார்கள். 20 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. பிரதமர் நரேந்திர மோடி, இமாச்சலப் பிரதேச முதலமைச்சர் சுக்விந்தர் சிங் சுகு உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். பலியானவர்களின் குடும்பத்திற்கு பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ.2 லட்சம் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இமாசலப்பிரதேசம், உத்தரகண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் பனிப்பொழிவு மிகக்கடுமையாக உள்ளது. மூடுபனி காரணமாக பார்வை பரப்பு குறைவாகவே உள்ளது. இந்நிலையில் இமாசலப்பிரதேசத்தின் சிர்மாவுர் மாவட்டத்தில் சிம்லா நகரில் இருந்து குப்வி நகர் நோக்கி சென்ற தனியார் பேருந்து ஒன்று நேற்று 500 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்தில் சிக்கியது.

இதில் 10–க்கும் மேற்பட்டோர் பலியானார்கள் என பூர்வாங்க தகவல் தெரிவித்தது. சுமார் 20 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களுக்கு மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே பேருந்து விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 14ஆக உயர்ந்துள்ளது. மேலும் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் சாவு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று அஞ்சப்படுகிறது. இமாச்சலப்பிரதேச துணை முதல்வர் முகேஷ் அக்னிகோத்ரி முழு வீச்சில் மீட்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை பணித்தார். மாநில சுகாதாரத்துறை அமைச்சர் தானிராம் சந்தில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்குமாறு மருத்துவர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

மிகமிக மோசமான நிலையில் உள்ளவர்கள் மேல் சிகிச்சைக்காக சிம்லாவில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மருத்துவச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று தானிராம் சந்தில் தெரிவித்துள்ளார். விபத்து எதனால் ஏற்பட்டது என்பது பற்றிய விவரம் உடனடியாக வெளிச்சத்துக்கு வரவில்லை. பனிப்பொழிவும் ஒரு காரணமாக இருக்கக் கூடும் என்று அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இமாச்சலப்பிரதேச முதல்வர் சுக்விந்தர் சிங் சுகு இரங்கல் தெரிவித்துள்ளார். உயிரிழந்தோரின் குடும்பத்துக்கு தேவையான உதவி செய்யப்படும், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு தரமான சிகிச்சை அளிக்கப்படும் என்று சுக்விந்தர் சிங் சுகு தெரிவித்துள்ளார்.

இமாச்சலப்பிரதேச சம்பவத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்து உள்ளதுடன், இழப்பீடும் அறிவித்து உள்ளார். இதன்படி பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து பலியானவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் அளிக்கப்படும் என பிரதமர் அலுவலகம் தெரிவித்து உள்ளது. பா.ஜ.க. தேசியத் தலைவரும், மத்திய சுகாதாரத்துறை அமைச்சருமான ஜெகத் பிரகாஷ் நட்டா, மாநில பா.ஜ.க. தலைவர் ராஜீவ் பிண்டால், சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் ஜெய்ராம் தாக்கூர். சிம்லா எம்.பி. சுரேஷ் காஷியப் உள்ளிட்டோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



திருப்பத்தூர் நாகப்பா, மருதப்பா அரசு மேல்நிலைப்பள்ளிகளில் புதிய வகுப்பறைகளை திறந்து வைத்து அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன்குத்துவிளக்கேற்றினார்.அருகில்கலெக்டர்பொற்கொடி,கல்விஅதிகாரிகள்பாலதண்டாயுதபாணி, மாரிமுத்து மற்றும் பலர் உள்ளனர்.

# திண்டுக்கல்லில் போஸ்டர் ஒட்டும் தொழிலாளி மயங்கி விழுந்து சாவு!

திண்டுக்கல், ஜன.11–

திண்டுக்கல் நகர் சோலைக்கால் பகுதியைச் சேர்ந்தவர் குமார் (48). போஸ்டர் ஒட்டும் தொழிலாளி. மூன்று பெண்பிள்ளைகள் உள்ளனர். இவரது மனைவி இறந்த நிலையில் குமார் திண்டுக்கல் பகுதியில் சினிமா போஸ்டர், அரசியல் கட்சி போஸ்டர்களை ஒட்டி பிழப்பு நடத்தி வந்தார். நிலையில் என்ற காலை வணக்கம் போல் பேருந்து நிலையப் பகுதியில் போஸ்டர்களை ஒட்டி விட்டு ஸ்கீம் ரோட்டில் போஸ்டர் ஒட்டுவதற்கு தனது சைக்கிளில் வந்து கொண்டிருந்த



போது வலிப்பு நோய் ஏற்பட்டு கீழே தவறி விழுந்தார். அருகில் இருந்தவர்கள் முதல் உதவி அளித்தனர். 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் வந்து உடலை பரிசோதனை செய்தபோது அவர் ஏற்கனவே உயிரிழந்தது தெரிய வந்தது. பின்னர் அவரது உடல் திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.



நாசரேத்அரசுபெண்கள்மேல்நிலைப்பள்ளிமாணவிகளுக்குஅமைச்சர்அனிதாராதாகிருஷ்ணன்இலவசசைக்கிள்களை வழங்கினார். அருகில் உதவி கலெக்டர் கவுதம் உள்ளார்.

### இலங்கை நோக்கி நகரும் காற்றழுத்தம்:

# தமிழகத்தில் 4 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு அலர்ட்!


## மிக மிக கனமழை பெய்ய வாய்ப்பு!!

சென்னை, ஜன. 11–

இலங்கை நோக்கி நகரும் காற்றழுத்தத்தால் தமிழகத்தில் 4 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு அலர்ட் விடப்பட்டுள்ளது. இதனால் மிக மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இலங்கையை நோக்கி நகர்ந்து வருகிறது. சென்னைக்கு தெற்கு தென்கிழக்கில், 490 கி.மீ., தொலைவில் உள்ளது. மணிக்கு 6 கி. மீட்டர் வேகத்தில் நகர்ந்து வரும் இந்த காற்றழுத்த தாழ்வு, வடமேற்கு திசையில் நகர்ந்து, வடக்கு இலங்கையில் திரிகோணமலை யாழ்ப்பாணம் இடையே, இன்று மாலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக கரையை கடக்கக்கூடும்.

தெற்கு கேரள கடலோர பகுதிகள், அதை ஒட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில், ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் பெரும்பாலான இடங்கள், உள் மாவட்டங்களில் ஒருசில இடங்கள் மற்றும் புதுச்சேரியில் இன்று இடி, மின்னலுடன்



மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

கடலோர மாவட்டங்களில் பலத்த தரைக்காற்று வீசக்கூடும். திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூார் மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்காலில், இன்று மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. இதற்கான, ‘ஆரஞ்ச் அலெர்ட்’ எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# ஆவத்துவாடியில் கிராமத்தில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா!

போச்சம்பள்ளி, ஜன.11

காவேரிப்பட்டினம் அருகில் உள்ள ஆவத்துவாடி கிராமத்தில் உள்ள ரேஷன் கடையில், குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பான ரூ.3 ஆயிரம் ரொக்கம், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் இலவச வேட்டி, சேலை, முழு கரும்பு ஆகியவற்றை திமுக மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட தொண்டர்அணி அமைப்பாளர் நாகபூசனம், ஒன்றிய அவைத் தலைவர் இராமமூர்த்தி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தட்ரஅள்ளி ரமேஷ், முன்னாள் ஊராட்சி மன்ற துணை தலைவர் ஆவத்துவாடி கி.முரளி,தாபா பாஸ்கர்,அருள், ஜெயசீலன், கதிர்வேல், சுறா, ஜேகே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## திருப்பத்தூர் மாவட்டத்தில்

# போதைப்பொருள் குற்றவழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் பொது ஏலம் அறிவிப்பு வெளியானது!

திருப்பத்தூர் ஜன.11

திருப்பத்தூர் மாவட்டத்தில், வேலூர் சரகபோதைபொருள்ஒழிப்புகுழுவினரால் போதைப்பொருள் குற்ற வழக்குகளில் தொடர்புடைய மொத்தம் 39 வாகனங்கள் (இரண்டு ஆறு சக்கர வாகனம் 2 நான்கு சக்கர வாகனம் மற்றும் 35 இரண்டு சக்கர வாகனங்கள்) கைப்பற்றப்பட்டு, அரசுடைமையாக்கப்பட்டு ஏலம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

2) மேற்படி வாகனங்கள் 12.01.2026 தேதியன்று, திருப்பத்தூர் மாவட்டம் பாச்சலில் உள்ள ஆயுதப்படை மைதானத்தில், திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் ஏலம் விடப்படும். ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் 12 .01.2026 தேதி, காலை 8:00 மணி முதல் பிற்பகல் 12:00 மணி வரை, மேற்படி வாகனங்களை பார்வையிட்டு, ஏல முன்பணமாக இரு சக்கர வாகனங்களுக்கு ரூ.5000 /ம் 6 சக்கரம் மற்றும் 4 சக்கரம் வாகனங்களுக்கு ரூ. 10000/ம் ஆயுதப்படை வளாகத்தில் செலுத்தி பிற்பகல் 2:00 மணிக்கு நடைபெறும் போது ஏலத்தில் கலந்து கொள்ளலாம். அரசு நிர்ணயித்த மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகபட்சமாக ஏலம் கோருவோருக்கு வாகனங்கள் ஒதுக்கப்படும், மேலும் ஏலம் எடுத்த வாகனங்களை ஏலம் எடுத்தவுடன் முழுத்தொகையுடன் சேர்த்து இரண்டு சக்கர வாகனங்களுக்கு 12% GST யும், நான்கு சக்கர வாகனங்களுக்கு 18% GSTயும் சேர்த்து செலுத்த வேண்டும் (ஏடிஎம் மற்றும் இணைய வழி(ஆன்லைன்) பண பரிவர்த்தனை வசதி இல்லை)என்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.



போச்சம்பள்ளி அருகே பாரூர் பெரிய ஏரியில் இருந்து விவசாய பாசனத்திற்காக மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் தண்ணீர் திறந்து வைத்தனர்.



பந்தலூர் பகுதியில் கூடலூர் கலைக்குழு சார்பாக போதைப் பொருள், மாணவிகளுக்கு ஏற்படும் பாலியல் தொல்லை விழிப்புணர்வு மற்றும் சாலை பாதுகாப்பு காண விழிப்புணர்வு போன்றவை பாடல் மூலம் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

## ஜோலார்பேட்டை அருகே

# 3 தெருநாய்கள் கடித்து குதறியதில் 9 ஆடுகள் 2 வாத்துகள் உயிரிழப்பு; போலீசார் விசாரணை!



திருப்பத்தூர் ஜன.11

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட பெரிய கம்மியம்பட்டு ஊராட்சிக்குட்பட்ட கீழ் முஸ்லிம்தெரு பகுதியை சேர்ந்தவர் ரேவதி இவர் தங்களுக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் விவசாய நிலத்தில் வீடு கட்டி விவசாயம் செய்துகொண்டு விவசாய நிலத்திலேயே ஆடு,மாடு,கோழி,வாத்து உள்ளிட்டவைகளை வளர்த்து வந்துள்ளார்.

இந்த நிலையில் வழக்கம்போல நேற்று ஆடு,மாடுகளை கொட்டகையில் கட்டிவிட்டு கோழி,வாத்து உள்ளிட்டவற்றை கூண்டில் அடைத்துவிட்டு தூங்க சென்றுள்ளார்.

அப்போது திடீரென நேற்று நள்ளிரவு 2 மணி அளவில் ஆடு கத்தும் சத்தம் கேட்டு வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்த போது மூன்று தெருநாய்கள் ஆடுகள் மற்றும் வாத்துகளை கடித்து குதறி உள்ளது அதனைப்பார்த்த ரேவதி கத்தி கூச்சலிட்டு தெருநாய்களை விரட்டி அடித்துள்ளார்.

மேலும் மூன்று தெருநாய்கள் கடித்துகுதறியதில் 9 ஆடுகள் மற்றும் இரண்டு வார்த்துகள் உயிரிழந்துள்ளது. பின்னர் இது தொடர்பாக ரேவதி பெரியகம்மியம்பட்டு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஜோலார்பேட்டை போலீசாருக்குதகவல் தெரிவித்துள்ளார்.

தகவலின் பெயரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த விஏஓ மற்றும் ஜோலார்பேட்டை போலீஸார் விசாரணை மேற்கொண்டதில் அதே பகுதியில் மாட்டு இறைச்சி வருவல் கடை நடத்தி வருவதாகவும் அங்குள்ள தெருநாய்கள் தான் ஆடுகள் மற்றும் வாத்து கடித்து கொன்றுள்ளது என கூறப்பட்ட நிலையில் இது தொடர்பாக ஜோலார்பேட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் மூன்று தெருநாய்கள் கடித்து குதறியதில் 9 ஆடுகள் இரண்டு வாழ்த்துக்கள் ஒரே நேரத்தில் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



வாணியம்பாடியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பை ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி, நகர மன்றத் தலைவர் உமா சிவாஜி கணேசன் ஆகியோர் வழங்கினர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல் உத்தரவின் வாயிலாக , தைப் பொங்கல் தமிழர் திருநாளை சிறப்பிக்கும் வகையில் , குடும்ப அட்டைதாரர்களுக்கு, சிவகாசி மாநகராட்சி 44 வது வார்டு பகுதிகளில் உள்ள ரேஷன் கடையில் பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ_3000 ரொக்கபணமாக விடுதலை சிறுத்தைகள் கட்சி மாமன்ற உறுப்பினர் பைக் பாண்டியன் தங்கபாண்டிச்செல்வி பொதுமக்களுக்கு வழங்கினார்.




# அகரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணி!

## தலைமை ஆசிரியர் தலைமையில் நடந்தது!

கிருஷ்ணகிரி, ஜன.11

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த அகரம் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில், உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாபெரும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.இந்தப் பேரணிக்கு அகரம் அரசு மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் க.பிரேம்குமார் தலைமை தாங்கி கொடியசைத்து பேரணியைத் துவக்கி வைத்து, எய்ட்ஸ் நோய் பரவும் விதம், அதனைத் தடுக்கும் முறைகள் மற்றும் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களைச் சமூகத்தில் பாகுபாடின்றி நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து மாணவர்களுக்கு பேசினார். பள்ளியில் இருந்து புறப்பட்ட இந்தப் பேரணி, அகரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளின் முக்கிய சாலைகள் வழியாகச் சென்றனர். பேரணியில் பங்கேற்ற மாணவ, மாணவிகள் எய்ட்ஸ் இல்லாத சமுதாயத்தைப் படைப்போம்"

"விழிப்புணர்வே சிறந்த மருந்து"

"நோயாளிகளைநேசிப்போம்,நோயை ஒழிப்போம்"போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திச் சென்றனர். மேலும், பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் விழிப்புணர்வு முழக்கங்களையும் எழுப்பினர்.முக்கிய வீதிகளின் வழியாகச் சென்ற இந்தப் பேரணி, மீண்டும் பள்ளியை வந்தடைந்தது. இந்தப் பேரணியின் போது மாணவர்களின் பாதுகாப்பிற்காகநாகரசம்பட்டிபோலீசார்பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.






## உங்க கனவ சொல்லுங்க கணக்கெடுப்பில்

# திருப்பத்தூரில் 736 தன்னார்வலர்களுக்கு அடையாள அட்டைகள்!

## ஆட்சியர், எம்.எல்.ஏக்கள் வழங்கினர்!!

திருப்பத்தூர் ஜன.11

திருப்பத்தூர் மாவட்டம், ஆதியூர் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் உங்க கனவ சொல்லுங்க தொடக்க நிகழ்ச்சி திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் சிவசௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது. அதில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி, ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தேவராஜ், ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் வில்வநாதன் ஆகிய 3 சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாவட்ட மகளிர் திட்ட இயக்குனர் விஜயகுமாரி. மாவட்ட ஒன்றிய குழு தலைவர் என் கே ஆர் சூர்யா குமார் நாட்றம் பள்ளி ஒன்றிய சேர்மன் வெண்மதி முனிசாமி ஆம்பூர் மேச்சேரி சுரேஷ். திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ் ராஜேந்திரன். திருப்பத்தூர் நகர மன்ற தலைவர் சங்கீதா வெங்கடேசன். கந்திலி ஒன்றிய குழு தலைவர் திருமதி திருமுருகன். ஜோலார்பேட்டை ஒன்றிய குழு தலைவர் சத்யா சதீஷ். கந்திலி ஒன்றிய செயலாளர் முருகேசன் திருப்பத்தூர் மாவட்டத்தில் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டு உள்ள 736 தன்னார்வலர்களுக்கு அடையாள அட்டை மற்றும் கணக்கெடுப்பு படிவங்களை வழங்கினர்.

# ராஜபாளையம் காவல் நிலையத்தில் தென்மண்டல ஐஜி ஆய்வு!

ராஜபாளையம் ஜன.11

தென்மண்டல ஐஜியாக பொறுப்பேற்ற விஜேந்திர பிதாரி முதன்முறையாக விருதுநகர் மாவட்டம் வருகை தந்தார் வருகை தந்த விஜேந்திர பிதாரியை மதுரை டிஐஜி அபிநவ்குமார், விருதுநகர் மாவட்ட டி எஸ் பி டி கண்ணன் ஆகியோர் வரவேற்றனர். விருதுநகர் ஆயுதப்படை பிரிவிற்கு வருகை தந்த ஐஜி அங்குள்ள காவலர்களின் குறைகளை கேட்டறிந்தார். மேலும் அங்கு முகாமில் நடைபெறும் பணிகள் மற்றும் அங்குள்ள வசதிகள் குறித்து காவலர்களிடம் கேட்டறிந்தார். பின்னர் விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வந்து அங்குள்ள பணிகள் மற்றும் உள்ள மற்ற பதிவேடுகளை பார்வையிட்டார். நிலையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்கவும், மாவட்டம் முழுவதும் உள்ள கஞ்சா, குட்கா போன்றவைகளை முழுமையாக கட்டுப்படுத்தவும், பழைய குற்றவாளிகளை கண்டறிந்து திருவிழா சமயத்தில் இல்லங்களுக்கு வருகை தரும் அவர்களை கண்டறிந்து குற்றங்களை முழுமையாக ஒடுக்குமாறும் அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்தார். பின்னர் ஐஜி மற்றும் டிஐஜி எஸ்பி சகிதம் ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்திற்கு வருகை தந்து அங்கு உள்ள அனைத்து பதிவேடுகள் மற்றும் தண்டனைக்குரிய முன்னாள் குற்றவாளிகள் உள்பட அனைவரையும் கண்டறிந்து உடனடியாக நிலுவையில் உள்ள வழக்குகளை முடிக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். மூன்று மணி நேரம் வரை ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு பின்னர் மதுரைக்குச் சென்றார்.ஆய்வின்போது ராஜபாளையம் டிஎஸ்பி பசினா பீவி மற்றும் காவல் ஆய்வாளர்கள் அனைவரும் உடனிருந்தனர்.

# புதிய தலைமையின் கீழ் நிப்பான் பெயிண்ட் இந்தியா: "இந்தியா முதன்மை" வளர்ச்சி செயல் திட்ட அறிவிப்பு!



சென்னை ஜன.11

நிப்பான் பெயிண்ட் இந்தியா, புதிய மேனேஜிங் டைரக்டர் ஷரத் மல்ஹோத்ராதலைமையில், "இந்தியா முதன்மை" வளர்ச்சி உத்தியை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. NIPSEA குழுவின்ஒரு பகுதியாக செயல்படும் நிறுவனம், இந்தியா முழுவதும் சந்தை விரிவாக்கம், ஒருங்கிணைந்த இயக்க மாதிரி மற்றும் நீண்ட கால முதலீடுகள் மையமாகக் கொண்டு, தலைமை மாற்றத்திற்கு பிந்தைய தனது முதல் முக்கிய முன்னெடுத்தல் வெளியிட்டுள்ளது. டெக்கரேட்டிவ், தொழில் துறை, மோட்டார் வாகன மற்றும் மர கோட்டிங் துறைகளில் சமநிலையான வளர்ச்சியை இலக்காகக் கொண்டு, இந்தியா முழுவதும் விநியோக மற்றும் டீலர் வலையமைப்பில் முதலீடுகள் அதிகரிக்கப்படுகின்றன.இதுகுறித்துகருத்துதெரிவித்தநிப்பான்பெயிண்ட் இந்தியா மேனேஜிங் டைரக்டர் ஷரத் மல்ஹோத்ரா, "இந்தியா நிப்பான் பெயிண்டிற்கான முக்கியமான நீண்ட கால சந்தை. உலக தரத்துடன் இணங்கும், உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட இந்தியசார்ந்த வளர்ச்சி மாதிரி உருவாக்குவதே எங்கள் நோக்கம்" என்றார். இதனை மேலும் வலியுறுத்திய நிப்பான் பெயிண்ட் டெக்கரேட்டிவ் பிசினஸ் தலைவர் மார்க் டைட்டஸ், "பிரீமியம் தயாரிப்புகள், வலுவான சேனல் கூட்டாண்மைகள் மற்றும் தயாரிப்பு புதுமை மூலம் இந்திய சந்தையில் நீடித்த வளர்ச்சியை எட்டுவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்" என்று தெரிவித்தார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் மண் மற்றும் மண் துகள்கள், கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள், சுவரொட்டிகள் மற்றும் பேனர்கள், தேவையற்ற பொருட்கள், கேட்பாரற்று நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள், கேபிள் ஒயர்கள், தெருவிளக்கு அருகில் உள்ள மரக்கிளைகள் ஆகியவற்றை அகற்றி, நடைபாதைகளில் நீர் தெளித்து சுத்தம் செய்தல் உள்ளிட்ட ஒட்டு மொத்தத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது. இதன் ஒரு பகுதியாக, ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட சாலையில் ஒட்டு மொத்தத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.



# வத்தலகுண்டுவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பிறந்த நாளை முன்னிட்டு அன்னதானம்!

வத்தலகுண்டு,ஜன.11

வத்தலகுண்டு திமுக நகரச் செயலாளர் சின்னத்துரைசார்பில்திமுககழகதுணைப் பொதுச் செயலாளர் ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான பெரியசாமி பிறந்தளநாள் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. முன்னதாக வத்தலகுண்டு நகர திமுக சார்பில் காளியம்மன் கோவிலில் அமைச்சர் ஐ பெரியசாமி பெயருக்கு அர்ச்சனை செய்து சிறப்பு பூஜை நடைபெற்றது.

பின்னர் இனிப்பு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மார்க்கெட் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கலைஞர் நகர் புறத்திட்ட வளாகத்தில் வத்தலக்குண்டு நகரச் செயலாளர் சின்னத்துரை சார்பில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. சிறப்பு விருந்தினராக முத்தலகுண்டு வடக்கு ஒன்றிய செயலாளர் முருகன் கலந்து கொண்டு அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில்விழாவிற்கு வத்தலக்குண்டு வடக்கு ஒன்றிய செயலாளர் முருகன் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்ற தலைவர் சிதம்பரம்,துணைத் தலைவர் தர்மலிங்கம்,மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரமணி,மாவட்ட விவசாய அணி தலைவர்ரவிஎன்றஇருளப்பன்,மாவட்ட பிரதிநிதி அமுதவேல், நகர துணை செயலாளர்கள் சோடா குமரவேல்,மகேந்திரன்,முருகேசன்,நகர இளைஞரணி அமைப்பாளர் தனசேகரன்,ஒன்றிய பொறுப்பு குழு உறுப்பினர்கள் செல்வராஜ், முருகேசன், சகாப்தின்,கார்த்தி,பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன்,மகாமுனி, பிரியாஜாம்சன், சுமதிகுமரவேல், முத்துமாரியம்மன்கோபாலன்,சியாமளாமுருகன், திமுக நகர நிர்வாகிகள்சேக்காகணேசன்,அழகர்,தங்கப்பாண்டி,மோகன், வினோத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் மடிக்கணினிகளை அமைச்சர் கீதாஜீவன் வழங்கினார்.



# கோகோ போட்டியில் தங்கம் வென்ற நத்தம் அரசு பள்ளி மாணவர்களுக்கு பாராட்டு!

நத்தம், ஜன.11

டெல்லியில் தேசிய அளவிலான கோகோ போட்டிகள் நடந்தது.இந்த போட்டியில் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து ஏராளமான பள்ளி,கல்லூரி அணிகள் கலந்து கொண்டன.இதில் நத்தம் துரைக்கமலம் அரசு மாதிரி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 4 பேர் கலந்து கொண்டு 19 வயதிக்குட்பட்டோருக்கான கோகோ போட்டியில் கலந்து கொண்டு அனைத்து விதமான போட்டிகளும் வெற்றி பெற்று தங்கம் வென்று சாம்பியன் பெற்றனர். மேலும் மாவட்ட அளவில் தங்கம் வென்று சாதனையும் படைத்தனர்.

தொடர்ந்து வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களை பள்ளியின் தலைமை ஆசிரியர் உமா மகேஸ்வரி, உடற்கல்வி இயக்குநர் ராஜ்குமார், விளையாட்டு ஆசிரியர் சோலைமலை உள்ளிட்ட ஆசிரியர்கள் அவர்களை பாராட்டி பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினர்.

# பேரகணி ஹெத்தையம்மன் திருவிழா: மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் பங்கேற்பு!



நீலகிரி,ஜன.11

நீலகிரி மாவட்டம், பேரகணியில் புதன்கிழமை நடைபெற்ற படகர் இன மக்களின் பாரம்பரிய ஹெத்தையம்மன் திருவிழாவில், மத்திய செய்தி, ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் எல்.முருகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். நீலகிரி மாவட்டத்தில் உள்ள நான்கு சீமைகளில் 300க்கும் மேற்பட்ட கிராமங்களில் படகர் இன மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் ஆண்டுதோறும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் ஹெத்தையம்மன் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம்.

இந்த திருவிழாவிற்காக, படகர் இன மக்கள் 48 நாட்கள் விரதம் இருந்து, தாய்வீடாகக் கருதப்படும் கொதுமுடி ஹெத்தையம்மன் கோயிலுக்கு பாரம்பரிய உடைகள் அணிந்து, செங்கோலுடன் நடைப்பயணம் மேற்கொண்டு அருள்வாக்கு கூறுவது முக்கிய நிகழ்வாக இடம்பெறுகிறது. இந்த ஆண்டு பேரகணி ஹெத்தையம்மன் திருவிழாவில் பங்கேற்பதற்காக, கோத்தகிரி ஜான்ஸ் கொயா' பகுதிக்கு வருகை தந்த மத்திய இணை அமைச்சர் எல்.முருகனுக்கு, மாவட்ட பாஜக சார்பில் மாவட்ட தலைவர் தர்மன், மாவட்ட பொதுச் செயலாளர் பரமேஸ்வரன், மாநில செயற்குழு உறுப்பினர் அன்பரசன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் பிரமுகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# வத்தலக்குண்டு மகாலட்சுமி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா மதிவண்டி வழங்கும் விழா!



வத்தலக்குண்டு ஜன.11

வத்தலக்குண்டு மகாலட்சுமி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சியில் விலையில்லா மதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு பள்ளி செயலா' ராமதாஸ் தலைமை தாங்கினா'ா. பேரூராட்சி தலைவா' சிதம்பரம் முன்னிலை வகித்தா'ா. பள்ளி தலைமை ஆசிா'ியை செல்வராணி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினா'. உதவி தலைமை ஆசிா'ியை செல்வ சிலம்புமணி வரவேற்புரையாற்றினா'. இந்நிகழ்ச்சியில் 20252026ம் கல்வியாண்டிற்கான பதினோறாம் வகுப்பு மாணவிகளுக்கு 172 மதிவண்டிகளை திமுக நகர செயலாளா' சின்னத்துரை மற்றும் பேரூராட்சி தலைவா' சிதம்பரம் வழங்கினா'.



## திருப்பூரில்
# டாடா ஏஐஏ லைப் இன்சூரன்ஸ் சார்பில் "சங்கல்ப் யாத்ரா "!

திருப்பூர், ஜன.11

திருப்பூரில் டாடா ஏஐஏ லைப் இன்சூரன்ஸ் சார்பில் "சங்கல்ப் யாத்ரா " என்ற பெயரில் வரும் 2047க்குள் அனைவருக்கும் இன்சூரன்ஸ் என்ற மத்திய அரசின் நிலைப்பாட்டை வலியுறுத்தி திருப்பூர் குமரன் சிலையில் இருந்து ராயபுரம் வரை டாடா ஏஐஏ இன்சூரன்ஸ் முகவர்கள் இன்சூரன்ஸ் குறித்த விழிப்புணர்வு பேரணி நடத்தினார்கள்.

பேரணியை காவல்துறை ஆய்வாளர்கள் ஜெகநாதன்,பாண்டியராஜன் துவக்கி வைத்தார்கள்

இந்த பேரணி பொது மக்கள் வரவேற்று இன்சூரன்ஸ் குறித்த கேள்விகளை கேட்டு பயன் பெற்றார்கள்.

பேரணி முடிவில், கிளை மேலாளர் திரு. சிவகுமார் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்து நிறைவு செய்தார்கள்

# ஆம்வே இந்தியா, அதிவேகமான மற்றும் தடையற்ற சேவையின் மூலம் ஹோம் டெலிவரி அனுபவத்தை மறுவரையறை செய்கிறது!

கோவை, ஜன.11

ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுத் தேவைகளை பூர்த்தி செய்யும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான ஆம்வே இந்தியா, தனது ஹோம் டெலிவரி செயல்பாடுகளில் மேற்கொண்டுள்ள முக்கிய மேம்பாடுகளைப் பகிர்ந்துள்ளது. இந்த மேம்பாடுகள், நாடு முழுவதும் உள்ள விநியோகஸ்தர்கள் மற்றும் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு அதிவேகமான, அதிக நம்பகமான மற்றும் தடையற்ற ஆர்டர் அனுபவத்தை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில், ஆம்வே தனது ஹோம் டெலிவரி திறன்களை கணிசமாக வலுப்படுத்தியுள்ளது, இது டெலிவரி வேகத்தில் பெரும் முன்னேற்றத்தை அளித்துள்ளது—விநியோக நேரத்தை 48% குறைத்துள்ளது (3.1 நாட்களில் இருந்து வெறும் 1.6 நாட்களாக), மற்றும் அடுத்த நாள் டெலிவரிகளை 29% லிருந்து 55%க்கும் மேலாக அதிகரித்துள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட அனுபவமானது அதன் சேவை வலையமைப்பின் முக்கிய விரிவாக்கத்தால் ஆதரிக்கப்படுகிறது, இது இப்போது இந்தியாவின் 90%க்கும் அதிகமான பின்கோடுகளை சென்றடைகிறது—அதாவது 8,000லிருந்து 17,500க்கும் அதிகமான இடங்களுக்கு விரிவடைந்துள்ளது. இந்த மைல்கற்கள், இந்தியா முழுவதும் உள்ள நுகர்வோருக்கு தரமான நல்வாழ்வு தயாரிப்புகளை எளிதில் கிடைக்கச் செய்வதில் ஆம்வே கொண்டுள்ள அசைக்க முடியாத உறுதியைப் பிரதிபலிக்கின்றன.



சிவகங்கைமாவட்டம்,காரைக்குடிஅழகப்பாபல்கலைக்கழகஎல்.சி.டி.எல்பழனியப்பன் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தன்னார்வலர்களுக்கு பொதுமக்களிடையே கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கான தொகுப்புக்களை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, , காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி , மகளிர் திட்ட இயக்குநர் கவிதப்பிரியா உட்பட பலர் உள்ளனர்.



# ஓசூரில் புதிய நியாய விலை கடை விரிவாக்கம் மற்றும் நூலகம் திறப்பு!
## எம்.எல்.ஏ., மேயர் பங்கேற்பு! !

ஓசூர், ஜன.11

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 37 வது வார்டு டிவிஎஸ் நகர் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நியாய விலை கடை விரிவாக்கம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் நூலகம் ஆகியவற்றை ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய் பிரகாஷ் மற்றும் மாநகர மேயர் எஸ் ஏ சத்யா உள்ளிட்டோர் திறந்து வைத்தனர். பின்னர் டிவிஎஸ் நகர் எஸ்பிஎம் காலனி பகுதி பொதுமக்களுக்கு தமிழ்நாடு அரசு அறிவித்த பொங்கல் பரிசு தொகுப்பு, கரும்பு மற்றும் வேஷ்டி சேலை ஆகியவற்றுடன் ரொக்க பணம் 3000 ரூபாயை சட்டமன்ற உறுப்பினர் ஒய் பிரகாஷ் மற்றும் மாநகர மேயர் எஸ் ஏ சத்யா ஆகியோர் வழங்கி துவக்கி வைத்தனர்.

பின்னர் பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின் பொழுது 37வது வார்டு மாமன்ற உறுப்பினரும் வரி மற்றும் வருவாய் குழு தலைவருமான ஆர் சென்னீரப்பா உள்ளிட்ட திமுகவினர் பங்கேற்றனர்.



தருமபுரி அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் தருமபுரி கோட்டம் நெடுஞ்சாலைத்துறை சார்பாக சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், கொடியசைத்து துவக்கி வைத்தா. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, தருமபுரி நெடுஞ்சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு கோட்டப்பொறியாளர் பி.நாகராஜி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் சாலைப்பணியாளர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.



தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சிக்குட்பட்ட தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுமக்களால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தேனி பாராளுமன்ற உறுப்பினர்தங்கதமிழ்செல்வன்,பெரியகுளம்சட்டமன்றஉறுப்பினர்கே.எஸ்.சரவணகுமார் ஆகியோர் முன்னிலையில் பெற்றுக்கொண்டு, தனித்துவமான அடையாள எண்ணுடன் கூடிய கனவு அட்டைகளை வழங்கினார்கள்.



இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் போக்குவரத்துத்துறை சார்பில், சாலை பாதுகாப்பு மாத விழாவையொட்டி, வட்டாரப் போக்குவரத்துத்துறை அலுவலகம், காவல்துறை, இருசக்கர விற்பனையாளர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகள் இணைந்து பொதுமக்களுக்கு இருசக்கர வாகனங்களில் செல்லும்போது ஹெல்மெட் அணிவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத்சிங்காலோன்,கொடியசைத்துதுவக்கிவைத்தார்.உடன்வட்டாரப்போக்குவரத்து அலுவலர் ஆனந்த் உள்ளார்.



# பாலக்கோடு அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் 2 வரலாற்று நூல்களை வெளியிட்டு மாவட்ட கலெக்டர் வாழ்த்துரை!

தருமபுரி,ஜன.11

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் அறம் இலக்கிய அமைப்பு மற்றும் அரசு பாலிடெக்னிக் கல்லூரி இணைந்து நடத்திய வரலாற்று நூல் வெளியீட்டு விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் சதிஷ் தலைமை வகித்தார்.

கல்லூரி முதல்வர் செல்வராணி வரவேற்று பேசினார். கூட்டுறவு சர்க்கரை ஆலை செயலாட்சியர் ரவி முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் இராஜேந்திர சோழனின் அரிய தகவல்கள்1001 என்ற வரலாற்று நூலை ஆட்சியர் வெளியிட முதன்மைகல்விஅலுவலர்ஜோதிசந்திரா பெற்றுக் கொண்டார். சோழன் வென்ற ஈழம் என்ற நூலை முன்னாள் தருமபுரி எம்.பி. மருத்துவர் செந்தில் வெளியிட சமூக ஆர்வலர் ரவிசொக்கலிங்கம் பெற்றுக் கொண்டார்

நூல் வெளியீட்டு விழாவில் பேசிய மாவட்ட ஆட்சியர் சதிஷ், தமிழ்நாடு அரசு வரலாற்றுக்கு அதிக முக்கித்துவம் கொடுத்து,கீழடி,பொருநை போன்ற அருங்காட்சியகங்களை உருவாக்கி வரலாற்று தடயங்களை பாதுகாத்து வருகிறது.

சிந்துசமவெளி நாகரீகம் தொடங்கி இன்றைய காலம் வரை தொடர்ச்சியான தொல்லியல் ஆய்வுகள்நடைபெற்று வருகிறது. நூலாசிரியர் பல்வேறு இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு வரலாற்று தரவுகளின் அடிப்படையில் இந்த இரு நூல்களையும் உருவாக்கியுள்ளார், இராஜேந்திர சோழன் பற்றி ஆயிரம் தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்குறியதாகும் வருங்கால மாணவர்கள்இவரதுபணிகளைமுன்மாதிரியாக கொண்டு வெற்றி பெற வாழ்த்தினார்.

முதன்மைக் கல்வி அலுவலர் ஜோதி சந்திரா பேசுகையில் நூலாசிரியர் அறம் கிருஷ்ணன் இக் கல்லூரியின் முன்னாள் மாணவர், இவர் கடந்த ஆறு மாதங்களில் ஆறு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார், முக்கியமாக இராஜேந்திர சோழனின் கங்கையும்கடாரமும்,மற்றும் அரிய தகவல்கள் 1001 போன்ற நூல்கள் வரலாற்றின் மீது மிகுந்த ஆர்வத்தை ஏற்படும் வகையில் மகவும் சிறப்பாக உள்ளன. இதன் மூலம் வரலாற்று களஞ்சியங்களை எளிதாக மாணவர்கள் அறிந்து கொள்ள முடியும் என பாராட்டினார். கல்லூரி மூத்த ஆசிரியர்கள் ரவி, உத்திரபதி, தீர்த்தலிங்கம், லோகநாதன், மற்றும் முக்கிய பிரமுகர்கள் வே.சிவக்குமார் வெற்றிஞானசேகரன், சம்பத், சுதாகர்,, சாய்ராம், பாபு, ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். அறம் இலக்கிய அமைப்பு தலைவர் மற்றும் நூலாசிரியர்அறம் கிருஷ்ணன்அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார், அறம் இலக்கிய அமைப்பு செயலாளர் ராசு நன்றியுரையாற்றினார்.

இவ் விழாவில் பொதுமக்கள், எழுத்தாளர்கள்,கல்லூரி மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



விருதுநகர் மாவட்ட ஓய்வூதியர் அமைப்புகளின் தேசிய ஒருங்கிணைப்பு குழு மாவட்ட தலைவர் செல்வராஜ் தலைமையில் புதிய தொழிலாளர்கள் சட்டங்களை வாபஸ் வாங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தர்ணா போராட்டம் நடைபெற்றது.

# ஜன.12-ஆம் தேதி ஜெர்மனி பிரதமர் இந்தியா வருகை!

புதுடெல்லி, ஜன. 11

ஜெர்மனி நாட்டுப் பிரதமர் பிரீட்ரிக், ஜனவரி 12–ஆம் தேதி இந்தியாவுக்கு வருகிறார்.

குஜராத் மாநிலம், காந்திநகரில் பிரதமர் நரேந்திர மோடியுடன் அவர் இருதரப்புப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக, பிரதமர் அலுவலகம் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனி பிரதமர் ப்ரீட்ரிக்கின் முதல் இந்திய அரசுமுறைப் பயணம் இதுவாகும்.

இந்தப் பயணத்தின் போது, குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் உள்ள சபர்மதி ஆசிரமத்தை பிரதமர் மோடியும், பிரதமர் ப்ரீட்ரிக்கும் பார்வையிட உள்ளனர். பின்னர், சபர்மதி நதிக் கரையில் நடைபெறவுள்ளசர்வதேசகாற்றாடி திருவிழாவில் இருவரும் பங்கேற்க உள்ளனர். இதைத் தொடர்ந்து, காந்தி நகரில் உள்ள மகாத்மா காந்தி



கருத்தரங்கு மையத்தில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இந்தியா – ஜெர்மனி இடையே வியூக ரீதியிலான கூட்டாண்மை எட்டப்பட்டு 25 ஆண்டுகள் அண்மையில் நிறைவடைந்த நிலையில், இருதரப்பு உறவுகளின் முன்னேற்றம் குறித்து இரு தலைவர்களும் ஆலோசிக்க உள்ளனர்.

வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, தொழில்நுட்பம், கல்வி, திறன் மேம்பாடு, போக்குவரத்து, அறிவியல், புத்தாக்கம், ஆராய்ச்சி, பசுமைமேம் பாடு, மக்கள் ரீதியிலான தொடர்புகள் உள்பட பல்வேறு துறைகளில் நல்லுறவை மேலும் மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்படும்; இருதரப்பு விவகாரங்கள் மட்டுமன்றி பிராந்தியம் மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும் கருத்துகள் பரிமாறப்பட உள்ளன என்று பிரதமர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திண்டுக்கல் லூர்து அன்னை மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் விலையில்லா சைக்கிள்களை மேயர் இளமதி மாணவிகளுக்கு வழங்கினார்.

## தேர்தல் அறிக்கை தயாரிக்க

# 12 பேர் கொண்ட சிறப்புக் குழு!

## த.வெ.க. அறிவிப்பு!!

சென்னை, ஜன. 11

தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்காக 12 பேர் அடங்கிய உயர்மட்ட சிறப்புக் குழுவை அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தமிழக மக்களின் முன்னேற்றத்தையும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு த.வெ.க. தேர்தல் அறிக்கை அமையவுள்ளது. இதற்காக சிறப்புக் குழு அமைக்கப்படுகிறது. இக்குழு, தமிழகம் முழுவதும் உள்ள பொதுமக்கள், விவசாயிகள், வணிகர்கள், சிறு மற்றும் குறு தொழில் அமைப்புகள், கல்வியாளர்கள், செவிலியர்கள், மகளிர் அமைப்புகள், இளைஞர் அமைப்புகள், தொழிலாளர் சங்கங்கள் மற்றும்மருத்துவநிபுணர்களின்கருத்துகளைநேரடியாகக் கேட்டறிய திட்டமிட்டுள்ளது.

அவர்களிடம் இருந்து பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் தமிழக மக்களையும் ஒட்டுமொத்த மாநிலத்தையும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும்வகையில்தேர்தல்அறிக்கைதயார்செய்யப்பட உள்ளது.

தேர்தல் அறிக்கை குழுவில், த.வெ.க. கொள்கை பரப்புச் பொதுச்செயலாளர் அருண்ராஜ், துணை பொதுச்செயலாளர் ராஜ்மோகன், முன்னாள் எம்.எல்.ஏ.வான ஜே.சி.டி.பிரபாகர், தேசிய செய்தித் தொடர்பாளர்கள் எம்.கே.தேன்மொழி பிரசன்னா, வழக்கறிஞர் சத்யகுமார் மற்றும் நிர்வாகிகள் டி.எஸ்.கே.மயூரி,சம்பத்குமார்,அருள்பிரகாசம்,பரணிபாலாஜி, முகமது பர்வேஸ், மருத்துவர் டி.கே.பிரபு, கிறிஸ்டி பிருத்வி உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## விஜய்க்கு சிபிஐ சம்மன்:

# மத்திய தடய அறிவியல் குழுவினர் கரூரில் ஆய்வு!

கரூர், ஜன.11–

விஜய்க்கு சிபிஐ சம்மன் அனுப்பியுள்ள நிலையில் மத்திய தடய அறிவியல் குழுவினர் கரூரில் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் நடைபெற்ற த.வெ.க. பிரச்சாரக்கூட்ட நெரிசலில்சிக்கி 41 பேர்உயிரிழந்தவழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது. இந்த வழக்கில் த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜூனா, இணைப் பொதுச் செயலாளர் சிடிஆர். நிர்மல் குமார், கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் மற்றும் மாவட்ட ஆட்சியர் தங்கவேல், எஸ்.பி.ஜோஸ் தங்கையா உள்ளிட்ட காவல் அதிகாரிகள் டெல்லியில் உள்ள சிபிஐ தலைமையகத்தில் டிச.29–ம் தேதி ஆஜராகினர். அவர்களிடம் 3 நாட்கள் விசாரணை நடத்தப்பட்டது.

மேலும், டெல்லியில் உள்ள சிபிஐ தலைமையகத்தில் வரும் 12–ம் தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு த.வெ.க. தலைவர் விஜய்க்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில், கரூரில் சம்பவம் நடந்த வேலுசாமிபுரத்தில் மத்திய உள்துறை அமைச்சக விவகாரத்துறை அதிகாரி தலைமையில் மத்திய தடய அறிவியல் ஆய்வகக் குழுவினர் 10–க்கும் மேற்பட்டோர் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

விஜய்யின் பிரச்சார வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடம், சாலையின் அகலம் உள்ளிட்டவற்றை அளவீடு செய்தனர். அவற்றை வீடியோ பதிவு செய்து, புகைப்படமும் எடுத்துக் கொண்டனர்.



சென்னை மாநகராட்சி சார்பில் 123 தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புப் பகுதிகளில் ரூ.10.85 கோடி மதிப்பீட்டில் அதிக வெளிச்சம் தரும் வகையிலான மின்விளக்குகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு195, எழில் நகர் பகுதியில் அதிக வெளிச்சம் தரும் மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

## நாமக்கல்லில் 4-வது நாளாக

# ஊரக, நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தினர் நூதன போராட்டம்!

நாமக்கல், ஜன 11

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்க அனைத்து பணியாளர்கள் சங்க கூட்டமைப்பு சார்பில், மாநில அளவிலான, காத்திருப்பு பேராட்டம், தமிழகம் முழுவதும் 4வது நாளாக நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், 100 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் தலையில் முக்காடு போட்டும் முகத்தை மூடியும் நூதன முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்க பணியாளர்களுக்கு அடிப்படை ஊதிய உயர்வு வழங்க வேண்டும், பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம், அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக விடுவிக்க வேண்டும்என்பது உள்பட பல்வேறு கோரிக்கை வலியுறுத்தி இந்த போராட்டம் நடந்தது.



பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிதலைவர் ராஜேஸ்குமார் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில், மருத்துவ பயன்பாட்டிற்காக சிறிய சரக்கு ரக வாகனத்தினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மேயர் கலாநிதி உட்பட பலர் உள்ளனர்

## தூத்துக்குடி அரசு ஆஸ்பத்திரியில்

# நோயாளிகளின் உதவியாளர்கள் காத்திருக்கும் அறை!

## அமைச்சர் கீதா ஜீவன், கனிமொழி எம்.பி. திறந்து வைத்தனர்!!

தூத்துக்குடி, ஜன.11

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி தலைமை மருத்துவமனையில் தினமும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் சிகிச்சைக்காக வருவதால், அவர்களுடன் வரும் உறவினர்கள் மற்றும் உதவியாளர்கள் உட்காரும் வசதி இல்லாமல் மருத்துவ மனைவளாகம்முழுவதும் தரையில் அமர்ந்து காத்திருக்க வேண்டிய சூழல் நீண்டநாள் இருந்து வந்தது.

இந்நிலையில், 46 லட்சம் ரூபாய் மதிப்பில் ஆண்கள், பெண்கள் என தனித்தனியாக உதவியாளர்கள் காத்திருக்க சரியான வசதிகளுடன் கூடிய அறைகள் கட்டப்பட்டுள்ளன. இதில் மின்விசிறி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கொசு வலை, கண்காணிப்பு கேமரா உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.





புதிய காத்திருப்பு அறையின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்பி மற்றும் அமைச்சர்கீதாஜீவன் ஆகியோர் கலந்து கொண்டு அறைகளை திறந்து வைத்தனர்.

பின்னர், கிராம சுகாதார நிலையத்துக்காக ஸ்பிக் உரத்தொழிற்சாலை நிறுவனம் ரூ.10 லட்சம் மதிப்பில் பங்களிப்பு வழங்கி, குழந்தைகளுக்கான இன்குபெட்டர், ஏர் கூலிங் மானிட்டர் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை கனிமொழி கருணாநிதி எம்பி வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் பிரியங்கா, மருத்துவ மனை முதல்வர் சிவகுமார், உறைவிட மருத்துவர் சைலஸ்ஜெபமணி, மாநகராட்சி உதவி ஆணையர் காந்திமதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சிப்காட் தொழிற் பூங்காவில், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் சார்பாக, "சிப்காட் போகி" எனப்படும் மாபெரும் தூய்மைப் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன், சிப்காட் தலைமை நிர்வாக அலுவலர் சிபிசக்ரவர்த்தி, சிப்காட் மேற்கு மண்டல செயற்பொறியாளர் பசுபதி, பர்கூர் சிப்காட் திட்ட அலுவலர் ஏ.சிந்து உள்ளிட்ட பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து சிப்காட் தொழில் பேட்டைகளில் "சிப்காட் போகி" தூய்மை பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் பொற்கொடி, தமிழரசி எம்.எல்.ஏ முன்னிலையில் கொடியசைத்து துவக்கி வைத்தார் உடன் சிப்காட் திட்ட அலுவலர் பாலமுரளி அனைத்து நிறுவனங்களின் பணியாளர்கள் அரசின் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்று சிறப்பித்தனர்.



மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழில் பூங்காவில் மாபெரும் தூய்மைப்பணியை தொடங்கி வைத்து, பார்வையிட்டார். உடன் செயற்பொறியாளர் ( சிப்காட், சென்னை) திருவருள் உட்பட பலர் உள்ளனர்.